**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,**
**நாள். 08.04.2025.**

**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு,</u>**
**<u>அசல் வழக்கு எண். 140/2019</u>**

2025-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 08ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | காமாட்சி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| க/பெ | : | கோதண்டம் | வயது | : | 50 |
| ஊர் | : | ஆசூர் | தொழில் | : | |

**<u>வா.சா.1 ( காமாட்சி): வாதி தரப்பில் முதல் சாட்சியின் குறுக்கு விசாரணை: (5 மற்றும் 6 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தரப்பில் குறுக்கு விசாரணை)</u>**

நான் இந்த வழக்கை பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 7-ஆம் பிரதிவாதி என்னுடைய தாயார் ஆவார். 1-ஆம் பிரதிவாதி குமார் என் அண்ணன் ஆவார். 5-ஆம் பிரதிவாதி எல்லம்மாள் என்னுடைய அக்கா ஆவார். நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள 2 அயிட்ட சொத்துக்களும் வீடு ஆகும். அதன் சர்வே எண், அளவுகள் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்து நரசமங்கலம் கிராமத்தில் உள்ளது. இந்த சொத்து பூர்வீக சொத்து என்பதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 7-ஆம் பிரதிவாதி கங்காபாய், அவர்கள் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த 03.08.2011 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தையும், 5-ஆம் பிரதிவாதி எல்லம்மாள் 6-ஆம் பிரதிவாதி புகழேந்திக்கு எழுதிக்கொடுத்த 17.09.2009 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தையும் ரத்து செய்யக்கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் தரப்பில் தாவா சொத்தானது பூர்வீக சொத்து அல்லது என்னுடைய தனிப்பட்ட சொத்து என்பதற்கான எந்த ஆவணங்களையும் ஆதாரமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சர்வே எண் 41/66 கொண்ட சொத்தானது

என்னுடைய அம்மா கங்காபாயிக்கு அரசாங்கத்தால் இலவசமாக வழங்கப்பட்ட சொத்தாகும் என்றால் சரிதான். 7-ஆம் பிரதிவாதி என் அம்மாவான கங்காபாய் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு அச்சொத்தினை செட்டில்மெண்ட் மூலமாக கொடுத்தார் என்றால் சரிதான். அயிட்டம் எண் 2 சொத்தான சர்வே எண் 41/2 சொத்தானது 1994 ஆம் ஆண்டு அரசாங்கம் இலவசமாக என்னுடைய அக்கா எல்லமாளுக்கு பட்டா வழங்கப்பட்டது என்றால் சரிதான். என்னுடைய அக்கா மூத்தவர் என்பதால் நாங்கள் அனைவரும் ஒப்புக்கொண்டு என் அக்காவிற்கே பட்டா வழங்கப்பட்டது. நாங்கள் அனைவரும் ஒப்புக்கொண்டதற்கான ஆவணம் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 5-ஆம் பிரதிவாதியான எல்லம்மாள் (அக்கா) திருமணம் ஆகி அவருடைய கணவருடன் கருத்துவேறுபாடு ஏற்பட்டு பிரிந்து, தாவா சொத்து 2ம் அயிட்ட சொத்தில் இருந்தார் என்றால் என் தயார் தான் இருந்தார். என் அக்கா எல்லம்மாள் அடிக்கடி வந்து செல்வார். எங்கள் ஊரைச்சேர்ந்த வரதப்ப நாயக்கர் தாவா 2ம் அயிட்ட சொத்தான புறம்போக்கு சொத்தை அனுபவித்து வந்த இடத்தினை 5-ஆம் பிரதிவாதி கைக்குழந்தையுடன் இருந்ததால் அவர்மீது இரக்கப்பட்டு தாவா சொத்தில் இருக்குமாறு கூறினார் என்றால் சரியல்ல. தாவா 2ம் அயிட்ட சொத்தினை 5ம் பிரதிவாதி எல்லம்மாள், அரசாங்கத்தால் இலவசமாக வீட்டு மனை பட்டா வழங்கப்பட்டு அனுபவித்து வந்து அதன் அடிப்படையில்தான் அவருடைய மகனான 6ம் பிரதிவாதியான புகழேந்தி பெயரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்தார் என்றால் எனக்கு தெரியாமலேயே என் அக்கா எழுதி வைத்துவிட்டார். 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்களும் பூர்வீக சொத்துகள் இல்லை அரசாங்கத்தால் இலவசமாகதான் கொடுக்கப்பட்டது அதில் உங்களுக்கு பாகம் கேட்கும் எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. ( சாட்சி அழுதுக்கொண்டே என் அம்மாவிற்கு நானும்தான் மகள் அதில் எனக்கும் பங்கு உண்டு என்று சொன்னார்). வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் என் அம்மா இறந்தார் என்றால் சரிதான். எந்த வருடம் என்றால் எனக்கு தெரியாது 2 வருடம் இருக்கும். 17.10.2022 -ல் என் அம்மா இறந்தார் என்றால் சரிதான்.

என் அப்பா பெயர் நடராஜன் ஆகும். என் அப்பாவின் பெயரில் பூர்வீக சொத்து ஏதும் இல்லை. வெளியூரில் உள்ளது. தாவா சொத்தை பொருத்து பூர்வீக சொத்து இல்லை என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்ய எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகி 35 வருடங்களாக வாலஜாபாத் கீழ்புத்தூர் கிராமத்தில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். தாவா சொத்தை கூட்டாக அனுபவிக்கவில்லை என்றால் சரியல்ல. என் கணவருடன் அடிக்கடி வந்து செல்வேன். தாவா சொத்து குறித்து உங்களுக்கு எந்த வித உரிமையும் இல்லை அதனால் எந்த பரிகாரமும் அளிக்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து குறித்து நீங்கள் மதிப்பீடு செய்து தமிழ்நாடு நீதிமன்ற கட்டணம் படி செலுத்திய தொகை தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா 2ம் அயிட்ட சொத்தான புகழேந்தி பெயரில் இருந்து அவர் தான் வீட்டு வரி செலுத்தியும் மற்றும் பட்டா பெயர் மாற்றம் செய்து கொண்டும் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல என் அம்மா பெயரில் தான் உள்ளது. தாவா 2ம் அயிட்ட சொத்தை பொறுத்தவரையில் தாவா தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**(1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஒத்திவைக்கப்படுகிறது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பாாத்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தாா்

Sd/Tmt.K.Naleeni.,B.Com.,B.L.,(Hons).,M.L.,
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,(மு.கூ.பொ)
செய்யாறு